# மொழியியல் நோக்கில் கம்பராமாயணம் :

## சுந்தரகாண்டத்தின் மொழிநடை உத்திகள்

கலாநிதி சுபதினி ரமேஷ்



**சோ**ழ மன்னர் தனியாட்சி செய்யத் தொடங்கிய காலமாகிய கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதற் பதினான்காம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி தமிழிலக்கிய வரலாற்றில் சோழர் காலப்பகுதி என வரையறுக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் எழுந்த இலக்கிய நூல்களின் வரிசையில் காப்பியங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. பெருங்காப்பியங்களில் ஒன்றான கம்பராமாயணத்தில் உள்ள மொழிநடை உத்திகளைச் சுந்தர காண்டத்தின் அடிப்படையிலே ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பராமாயணத்தைப் பல கோணங்களில் நின்று பார்க்க முடியும். மொழியியல் நோக்கில் கம்பனின் மொழிநடை உத்திகளை வெளிக் கொணர்வதற்கு முன் “நடை” (Style) என்ற பதத்தை ஆராய வேண்டிய தேவை இங்கு ஏற்படுகின்றது.

"நடை" (Style) என்பது ஒரு ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப்பாங்கே நடை என வரையறை செய்யலாம். மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் "நடை" என்பது ஆசிரியரின் தன்மையை வெளிப்படுத்தும் உள்ளத்தின் திட்பம் நடையின் திட்பமாகும். உள்ளத்தின் தெளிவு நடையின் தெளிவாகும். ஆசிரியரின் குழப்பமும், சிக்கலும் அவருடைய நடையிலும் தென்படும் என்பர். எனவே, ஆசிரியரின் நடையே அவருடைய இயல்பைக் காட்டும் உரைகல் என்றும் கூறுவர். நடை ஆசிரியருடைய உள்ளத்தின் சொல்லோவியம் (Style is the mental picture of the man who writes) என்பதும், குணத்தை அறியுங் கலை (Physiognomy of the mind) என்பதும் அவர்களது கருத்தாக அமைகின்றது.

நடை என்பது பொதுவாக ஆசிரியர் (Author), காலம் (Age), நோக்கம் (Purpose), கருப்பொருள் (Theme), இடம் (Geography), மக்கள் (Audience) முதலியவற்றில் தங்கியுள்ளது. இதற்கேற்ப நடையின் தன்மையும் வேறுபடும் என்பது திறனாய்வாளர்களின் கருத்து. பயனைக் கருதி நாட்டிலே மக்களுக்கு அறிவைப் பரப்ப வேண்டுமென்றால் இன்றைக்கு எழுத்தாளர் கைப்பற்ற வேண்டியது எளிய தெளிவு நடை என்பதை யாரும் மறுக்க முடியாது. "எளிய நடையே அழகிய நடை, எளிமையே மொழிநடைக்கு இனிய அணி" என்பது ஆங்கிலப் பழமொழி.

நடை ஒன்றின் நல்லியல்புகளான சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், படிப்பவருக்கு இனிமை, நல்ல சொற் கையாட்சி, புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைத்தல், சிறந்த பொருள் பயத்தல், கூறியதைத் திரும்பக் கூறாமை, உயிரோட்டமான கற்பனை, வசன அமைப்புக்கள் எல்லாம் கம்பனுடைய சுந்தரகாண்டத்திலும் இழையோடி உள்ளதைக் காண முடிகின்றது.

கம்பனின் மொழிநடை உத்திகளினை ஒலிநிலை உத்திகள், சொல்நிலை உத்திகள், பொருள்நிலை உத்திகள், தொடர்நிலை உத்திகள் எனப் பகுத்து நோக்கலாம்.

## ஒலிநிலை உத்திகள்

உலகில் உள்ள எந்த ஒரு மொழிக்கும் அடிப்படை ஒலியே. இவ் ஒலிக்குறிப்புச் சொற்களும், இரட்டைக் கிளவிகளும், ஓசைநயமும் ஒலிநிலை உத்தி வகைப்பாட்டினுள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒலியடிப்படையில் உணர்வும்

பொருளும் புலப்பட இவை கையாளப்படுதலால் இவை உத்தியாக அணுகத்தக்கன.

கம்பனின் ஒலிநிலை உத்திகளில் இரட்டைக்கிளவிகள் சிறப்பிடம் பெறுகின்றன. இரட்டில் பிரிந்து இசையாத இரட்டைக் கிளவிகள் ஒலியடிப்படையினவாகத் தோற்றம் தருவது நோக்கத்தக்கது. சுந்தரகாண்டம் நிந்தனைப் படலத்தில் ஒரு பகுதியான அரக்கியர் தத்தமக்குத் தோன்றியவாறு சீதையைக் கடிந்து கூறும் சந்தர்ப்பத்தை விபரித்த கவிச்சக்கரவர்த்தி,

*“முன் முன் நின்றார், கண்கனல் சிந்த முடுகுற்றார் :*
*மின் மின் என்னும் சூலமும் வேலும் இவையோச்சித்*
*தின்மின்! தின்மின்! என்று தெழித்தார் சிலர் எல்லாம்”*

(பாகம் 1, பக் 404, 481)

என்ற பாடலில் மின் மின் என்ற இரட்டைக் கிளவியைக் கொண்டு, சூலமும் வேலும் பளிச்சென்று ஒளிவிடும் தன்மையின என அவற்றின் பிரகாசத்தை விபரிக்கின்றார். மொழி நடை உத்திகளின் வரிசையில் கம்பனுடைய கவிகளில் ஒலிநிலை உத்திகள் இவ்வாறு பயின்று வருவதனை நோக்கலாம்.

## சொல் நிலை உத்திகள்

அடுத்து சொல்நிலை உத்திகள் கவிதையின் திறனுடைச் சொல் நடைக்கு வாய்ப்பாக அமைகின்றன. ஓர் படைப்பாளி சொல்லாற்றலும், மிக்க சொல்லறிவும் உடையவனாக இருந்தால், அவன் படைப்பு சொற்களஞ்சியமாக அமைந்து சிறக்க முடிகின்றது. சொல் உத்திகளில் புதுமைச்சொல் பெய்து பொருள் சிறக்கச் செய்வதில் கவிஞனின் தனித்தன்மை சுந்தரகாண்டத்தில் விரவிக் காணப்படுகின்றது.

நேரடியாகப் பண்பைப் புலப்படுத்தாது எதிர்மறையாக அதனைக் கூறி உணர்த்தும் சொல்லாக்க நிலையும் இக்கவிஞனுக்கு உரியதாக அமைகிறது.

*“வாராது ஒழியான் எனும் வண்மையினால்*
*ஓராயிரம் கோடி இடர்க்கு உடையேன் ;........*
*நாராயணனே! தனிநாயகனே!”*

(பாகம் 1, உருக்காட்டுப்படலம் பக் 412, 493)

சீதாப்பிராட்டி இராமபிரான் ஒருபோதும் தன்னை மீட்பதற்கு வாராமல் இருக்கமாட்டான் என வருந்திக் கூறும் சந்தர்ப்பத்தில் எதிர்மறையின் பயன்பாட்டை நோக்கலாம்.

சொல்லுத்திகளின் பிறிதொரு கோணத்தில் எண்ணுப் பெயர்களின் ஆட்சியும் கருதத்தக்கது. கவிஞன் எண்களைப் பலவாறு கையாளுகின்றான். ஓசை நயமும் சொல் அழகும் தரும் நிலையிலும், பல எண்களின் தொடர்ச்சியில் இன்பம் விளைவிக்கும் பாங்கிலும் அமைத்துச் செல்கின்றான்.

*"தடக்கை நால் ஐந்து பத்துத் தலைகளும் உடையான் தானே......"*

(பாகம் 1, கடல் தாவு படலம், பக் 64, 28)

இங்கு பெரிய இருபது கைகளையும் பத்துத் தலைகளையும் உடைய இராவணனது சிறப்பு எண்ணுப் பெயர்களின் ஊடாக விபரிக்கப்படுகின்றது. மேலும் ஒருசில பாடல் அடிகள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன. எனினும் எண்ணுப் பெயர்களின் ஆட்சி ஒவ்வொரு படலத்திலும் மிகையாகக் கொண்டு செல்வதை கம்பனின் மொழிநடையில் காண முடிகின்றது என்பது கண்கூடு

*"பாரைஞ்நூறுவ பற்பல பொற்புயம்*
*ஈர்ஐஞ் நூறு தலையுள; என்னினும்...."*

(பாகம் 2, பிணிவீட்டுப்படலம், பக் 317, 1147)

*"..... ஓராயிரம் கோடி இடர்க்கு உடையேன்;...."*

(பாகம் 1, உருக்காட்டப் படலம், பக் 412, 493)

இராமபிரான் தன்னை மீட்பதற்கு வராமல் இருக்கமாட்டான் என்று நம்பி ஓராயிரம் கோடி துன்பங்கள் நேர்ந்த போதும் உயிர் விடாமல் இருக்கின்றேன் என்று சீதாப்பிராட்டி கூறும் சந்தர்ப்பத்தில் துன்பத்தின் மிகையினை ஓராயிரம் கோடி என்ற எண்ணுப் பெயர் சுட்டி நிற்கின்றது.

சில எண்கள், எண்ணிக்கைகளை மீண்டும் மீண்டும் பயிலல் கம்பனிடம் காணப்படுகின்ற சிறப்பான உத்தி எனலாம்.

உருக்காட்டுப் படலத்தில் வானரங்களின் பேரெண்நிலையை வெள்ளம் என்ற சொல்லால் புலப்படுத்துவது வருணனை மிகுந்த பெருக்க மிகுதி உணர்வை ஏற்படுத்துகிறது. எண் வரையறைக்கு அப்பாற்பட்ட நிலையை படைப்பாளி தருகின்றார் எனலாம்.

*"எழுபது வெள்ளம் கொண்ட எண்ணன: உலகம் – எல்லாம்*
*...... ஒத்த வாநரம் வானின் நீண்ட"* (பாகம் 1, பக் 431, 519)

என்ற பாடல் அடி சான்றாக அமைகின்றது.

சொல்நிலை உத்திகளில் இங்கு குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம் முற்று, எச்சம், வினா, உம்மை போன்ற சொல்நிலைகளை அடுக்கி வைப்பது. இவ்வாறு

ஒரு பாடலை ஆக்கும் போது அது தனித்த இயல்பு கொள்கின்றது. விரைவு, ஐயம், உணர்வு மிகுதி, கருத்துச் செறிவு என்பவற்றைப் படிப்போன் மனதில் உயிரோட்டமாகச் செலுத்தும் கவியின் நடை உத்தி போற்றுதற்குரியது.

எச்சங்களை அடுக்கும்போது திரும்பத் திரும்ப ஒரே சொற்களை அடுக்கி மேலும் அழகு ஊட்டும் பண்பு சிறப்பிடம் பெறுகின்றது. சுந்தரகாண்டம் பிணி வீட்டுப்படலத்தின் ஒரு பகுதியில் அநுமன் இராவணன் கூறியவற்றை நன்கு ஆராய்ந்து பிறர்மனை நயத்தலால் வரும் பயனை இராவணனை நோக்கி பதில் கூறும் சந்தர்ப்பத்தினை விளக்கும் கம்பர்,

*"திறம் திறம்பிய காமச் செருக்கினால்*
*...... இறந்து இறந்து இழிந்து ஏறுவதே அலால்* (பாகம் 2, பக் 314, 1141)

என்கிறார். இறந்து இறந்து இழிந்து என்ற எச்சங்களைக் கையாளும் முறை நோக்குதற்குரியது. இதனை விட,

*"ஓடிக் கொன்றனன், சிலவரை; உடல் உடல் தோறும்*
*கூடிக் கொன்றனன், சிலவரை; கொடி நெடு மரத்தால்*
*சாடிக் கொன்றனன், சிலவரை; பிணந்தொறும் தடவிக்*
*தேடிக் கொன்றனன்.........."* (பாகம் 2, கிங்கரர் வதை படலம், பக் 73, 789)

இங்கு ஓடி, கூடி, சாடி, தேடி என்பன எச்சங்களாகும்.

வினைமுற்றுக்களை அடுக்கும் மொழிநடை உத்தியையும் இங்கு கண்டு கொள்ளலாம்.

*"ஆர்த்தார், அண்டத்து அப்புறத்தும்.....*
*ஈர்த்தார், முரசம் எற்றினார்;*
*இடித்தார்; தெழித்தார்; எம் மருங்கும்*
*பார்த்தார்; ஓடிச் சானகிக்கும்*
*பகர்ந்தார்; அவளும் உயிர் பதைத்தாள்*
*வேர்த்தாள்; உலந்தாள்; விம்மினாள்;......*
*விழுந்தாள்; அழுதாள், வெய்துயிர்த்தாள்"* (பாகம் 2, பக் 335,1171)

என்ற பிணி வீட்டுப்படலப் பாடலில் அநுமன் வாலிற்குத் தீ வைத்த செய்தியை சீதைக்கு அறிவிக்க அவள் வருத்தமுறும் சந்தர்ப்பத்தை காட்சிப்படுத்தும் படைப்பாளி ஆர்த்தார், ஈர்த்தார், இடித்தார், பார்த்தார், பகர்ந்தார், வேர்த்தாள், விழுந்தாள் என்ற வினைமுற்றுக்களை அடுக்கி நடையைச் சிறப்பித்துள்ளமையைக் காணலாம். பெரும்பாலும் போர் வருணனையிலேயே

கவிஞன் இம் முற்று அடுக்குதலை மிகுதியாகப் பயன்படுத்திபுள்ளான் போல் தெரிகின்றது. சம்புமாலி வதைப்படலம் பல அரக்க வீரர் அநுமனின் கடும் போரால் பல்வகையாகத் துன்புற்றுத் துவண்ட பாங்கினை இவ்வாறு அளிக்கின்றது.

*"வெருண்டனர், வியந்தனர், விழுந்தனர், எழுந்தனர்;*
*மருண்டனர், மயங்கினர், மறிந்தனர், இறந்தனர்;*
*உருண்டனர், உலைந்தனர், உழைத்தனர், பிழைத்தனர்;*
*சுருண்டனர், புரண்டனர், தொலைந்தனர், மலைந்தனர்"*

(பாகம் 2, பக் 109, 843)

இவ்வாறு முற்றுக்களை அடுக்குவது போன்றே வினாக்களை அடுக்கும் முறையும் கண்கொள்ளத்தக்கது. உருக்காட்டுப் படலத்தில் உவமைகளை இட்டு வினவி அடுக்கும் பாங்கை அநுமன் இராமபிரானது பற்களின் சிறப்பைக் கூறும் சந்தர்ப்பத்தினூடாக அவதானிக்க முடிகின்றது.

*"முத்தம் கொல்லோ? முழுநிலவின்*
*முறியின் திறனோ? முறை அமுதச்*
*சொத்தின் துள்ளி வெள்ளியினம்*
*தொடுத்த கொல்லொ? துறையறத்தின்*
*வித்து முளைத்த அங்குரம் கொல்?*
*வேறே சிலகொல்? மெய்ம் முகிழ்த்த*
*தொத்தின் தொகை கொல்? யாது என்று*
*பல்லுக்கு உவமை சொல்லுகேன்?* (பாகம் 1, பக். 448, 540)

என்ற பாடலில் இராமபிரானின் திருப்பற்களுக்கு உவமை முத்துக்களோ? பூரண சந்திரனது துண்டங்களின் வரிசையோ? வரிசையாக வைக்கப்பட்ட வெண்ணிறமுள்ள அமிழ்த் துளிகளின் கூட்டமோ! பல வழிகளாலும் செய்யப்படுகின்ற தருமம் என்னும் வித்தினின்று விளைந்த முளைகளோ? என மேலே காட்டியவாறு பல உவமைகளை அடுக்கியும் வினாச் சொற்களை நிர்ணயித்தும் காட்டும் பாங்கை அவதானிக்கலாம். சுந்தர காண்டத்தைப் பொறுத்தவரை கம்பன் அதிக அளவான வினாச் சொற்களைத் தொகுத்து அடுக்கிய பாங்கை தெட்டத் தெளிவாகக் காணமுடிகின்றது.

இலங்கையில் காணப்படும் சேனையின் மிகுதி பற்றி அநுமன் கூறும் கூற்றினை விபரிக்கும் ஆசிரியர்,

*"விற்படை பெரிது என்கேனோ? வேற்படை பெரிது என்கேனோ?*
*மற்படை உடைத்து என்கேனோ? வாட்படை வலிது என்கேனோ?"*

(பாகம் 1, பக். 448, 540)

ஒவ்வொரு சேனையும் அளவற்றது ஆதலின் எந்தச் சேனை பெரியது என்று அறிந்து சொல்ல இயலாது என்பதை எடுத்துக் கூறும்போது வினாச் சொற்களைத் தொகுத்துள்ள பாங்கை நோக்கலாம்.

"உம்" இடைச்சொல்லை பன்முறை அடுக்குதலும் கவிஞனிடம் காணக்கிடக்கின்றது. பட்டியல்களின் ஒரு முன் நிலையாக இவ் அடுக்குதலைக் கருதலாம். பொழிலிறுத்த படலப் பாடலான,

*"குழையும், கொம்பும், கொடியும் குயிற்குலம்*
*விழையும் தண்தளிர்ச் சூழலும், மென்மலர்ப்*
*புழையும், வாசப் பொதும்பும், பொலன் கொள்தேன்*
*மழையும், வண்டும், மயிலும், மடிந்தவே"* (பாகம் 2, பக் 27, 721)

என்பதில் "உம்" இடைச்சொல்லின் ஆட்சி குறிப்பிடத்தக்கது.

இன்னும் விளி, வியப்பு போன்ற சொற்களின் பல்நிலை அடுக்குதல்களும் சுந்தரகாண்டத்தில் சொல் உத்தியாக அணுகத்தக்கன.

அநுமன் இலங்கையை நோக்கி வியக்கும் காட்சியில் பொன்மயமான அமராவதி நகரம் இந்த இலங்கையை ஒத்திருக்கும் என்று கூறுதல் அறிவீனமாகும் அம்மா! என எடுத்தியம்பும் நிலையை

*"நன்னகர் அதனை நோக்கி நளினக்கை மறித்து, நாகர்*
*பொன்னகர் இதனை யொக்கும் என்பது புல்லிது:, அம்மா!...."*

(பாகம் 1, கடல்தாவுபடலம், பக் 106, 92)

என்ற கவிப்பெருக்கின் ஊடே அம்மா! என்ற வியப்பு உத்தியைப் பயின்றுள்ளதை நோக்கலாம்.

## பொருள் நிலை உத்திகள்

மொழி நடை உத்திகளில் அடுத்து பொருள் நிலை உத்தியாக அமையத்தக்கன பலவாகும். அணிகளில் அடிப்படையானதும் இலக்கியத் திற்கு இன்றியமையாததும் பல்வகைப் பொருளணிகளின் தோற்றக் களனாயமைவதும் உவமையாகும். உவமை இல்லாத பாடலே இல்லை என்று கூறும் அளவிற்குப்

பெரும்பான்மைச் செய்யுளிலும் உவமைப் பொருத்தப்பாடும் உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் போன்ற அணிகளும் ஆட்சியாகக் காணலாம்.

உவமைகளின் தனிச்சிறப்பினை, உருக்காட்டுப் படலத்தில் அநுமன் இராமபிரானது திருமேனி அழகை வருணித்தலினை விபரிக்க வந்த கம்பன் அதனை மிகைபடக் கையாண்டுள்ளதை நோக்கலாம். இராமபிரானின் பற்களின் சிறப்பு எவ்வெவற்றிற்கெல்லாம் உவமையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது என்பதை வினாக்களை அடுக்கும் சொல்லுத்தியின் எடுத்துக் காட்டுப் பாடல் மூலம் அறியலாம். கற்பனை வளம் செறிந்த கம்பனின் படைப்பில் தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிற்சி அணி என்பன விரவிக் காணப்படுகின்றன என்பதில் ஐயம் இல்லை.

ஊர் தேடு படலத்தில் இலங்கை மாநகரத்து மாடமாளிகைகள் பற்றிக் கூறும்போது அவற்றின் அழகைப், பொன் கொண்டு செய்யப்பட்டவையோ? மின்னலைக் கொண்டு செய்யப்பட்டவையோ? எவற்றால் இயற்றப்பட்டன என்னும் உண்மையை அறிந்து கொள்ள முடியாதவையாக அமைந்துள்ள உயர்ந்த கற்பனை வளத்தைப் படைப்பாளி பிரயோகித்துள்ளதை,

*“பொன் கொண்டு இழைத்து, மணியைக் கொடு பொதிந்த*
*மின் கொண்டு இழைத்த வெயிலைக் கொண்டு சமைத்த*
*என் கொண்டு இயற்றிய எனத் தெரி கிலாத*
*வன் கொண்டல் தாவி, மதி முட்டு வனமாடம்”* (பாகம் 1, பக் 109, 95)

## தொடர் நிலை உத்திகள்

கம்பன் கையாண்ட மொழிநடை உத்திகளில் தொடருத்தியாக அமையத் தக்கனவும் பல காணப்படுகின்றன. தொடர்நிலை உத்திகளுள் அடுக்குத் தொடர், இணைமொழி, மரபுத்தொடர், பழமொழித்தொடர்களைக் கையாளும் தன்மை என்பன குறிப்பிடத்தக்கன.

அக்ககுமாரன்வதைப்படலத்தை அடுத்த பாசப்படத்தில் இந்திரசித்து வீரவாதம் புரியும் நிகழ்வை விளக்கும் கம்பர்,

*“நல்லை! நல்லை! இஞ் ஞாலத்துள் நின்னொக்க நல்லார்*
*இல்லை! இல்லையால்! எறுழ் வலிக்கு யாரொடும் இகல*
*வல்லை! வல்லை! இன்று ஆகும், நீ படைத்துள வாழ் நாட்கு*
*எல்லை! எல்லை! யென்று, இந்திர சித்துவும் இசைத்தான்”*

(பாகம் 2, பக் 231, 1020)

என்ற பாடலினூடே நல்லை! நல்லை! இல்லை! இல்லையால்! வல்லை! வல்லை! எல்லை! எல்லை! என்று சொற்களை அடுக்கிய தொடர்ப் பாங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அடுக்குத் தொடர்கள் பாடலிற்கு ஓசைநயம் கூட்டுவனவாக அமைகின்றன.

அடுக்கினை மும்முறை பிரயோகிக்கும் நடைப்பாங்கும் ஆசிரியரிடம் சுட்டத்தக்கது.

*"இவன்! இவன்! இவன்! என நின்றார்........."*

(பாகம் 2, கிங்கரர் வதைப்படலம், பக் 65, 775)

இணைமொழி என்பது ஒரு பாடலிற்கு அழகைக் கொடுப்பது. இத்தகைய பண்பு கம்பனின் நடையிலும் இழையோடி உள்ளது. சுந்தரகாண்டம் கடல் தாவு படலத்தில் அநுமன் இலங்கையில் உள்ள பவள மலையின் அப்போதைய நிலையைக் கூறுதலை எடுத்துக் காட்டும் கவிச்சக்கரவர்த்தி,

*"மேக்குறச் செல்வோன் பாய.........*
*நூக்குறுத்து, அங்கும் இங்கும் தள்ளுற நுடங்கும் நோன்மை........."*

(பாகம் 1, பக் 105, 90)

"அங்கும் இங்கும்" என்பது இணைமொழி.

*"தெரிந்தொளிர் திங்கள் வெண்குடத்தினால், திரை*
*................ விரிந்தது வெண்ணிலா மேலும் கீழுமே"*

(பாகம் 1, ஊர்தேடு படலம், பக் 143, 149)

இங்கு மேலும் கீழும் என்பது இணைமொழிக்குள் சுட்டத்தக்கது.

இறுதியாக மேற்குறிப்பிட்ட சான்றுகளைத் தொகுத்து நோக்குமிடத்து எதுகைப் பயன்பாடு, ஓசை நயம் மிக்க சந்தத்தோடு கூடிய தன்மை, தொகைச் சொல், வியப்பிடைச் சொல், வியங்கோள், வினாச் சொல், அணிகளின் பயன்பாடு, ஒலிக்குறிப்பை உணர்த்தும் தன்மை என்பவற்றோடு கூடிய உயிரோட்டமான மொழிநடை உத்தியை, உத்தி வகைகளைக் கம்பன் தொகுத்தும் பகுத்தும் வகைப்படுத்தியும் நடத்திச் சென்றமை சாலச்சிறந்ததாக அமைகின்றது.

மொழிநடை உத்தியோடு காப்பிய உத்திகளும், கவிதை உத்திகளும் இணைகின்றன. பல்வகையான கூறுமுறை உத்திகளும் காட்சி உத்திகளும் கலக்கின்றன. வெவ்வேறு விதமான அணி உத்திகளும், யாப்புத்திகளும்

மிணைகின்றன. பல்வேறு பொருள்நிலை உத்திகளும் வெளியீட்டடிப்படை உத்திகளும் இடம்பெறுகின்றன. கவியாற்றலோடு உத்தியாக்கம் இணைந்து செல்வதால் முழுப்பார்வையிலும் பகுத்து நோக்குதலிலும் தனிக் கவிக் காட்சியிலும் உத்திச் சிறப்பு மிளிர்கின்றது. உத்தியில்லாப் பகுதியோ, பாடலோ இல்லை என்று கூறுமளவிற்கு இதன் போக்கு எங்கும் நிறைந்து பரக்கின்றது. படைப்பில் சொற்களைத் திறனறிந்து கையாள வேண்டும். மனத்திலே தோன்றும் சொற்களை எல்லாம் நடையிலே கையாளக் கூடாது. சொற்களை ஒன்றோடு ஒன்று மோதவிட்டு எவை வெற்றி பெறுகின்றனவோ அவற்றை நடையில் பயில வேண்டும். இத்தகைய மொழிநடை கவிஞனின் காப்பியப் படைப்பில் மரபும், புதுமையும் விரவிய நடை காணப்படுகின்றது. ஒலி, சொல், தொடர் ஆகிய மூன்றுநிலைகளிலும் வெவ்வேறுபட்ட உத்தி நிலைகளைக் கவிஞன் வகுத்தும் ஆக்கியும் தருகின்றான்.

கம்பன் பெருங்கவிச்சக்கரவர்த்தி ஆனமையால் அவன் படைத்த இராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு கவிதையும் மேற்கண்ட பல உத்தி வகை நிலைகளில் ஒன்றேனும் பெற்றுச் சிறக்கின்றன. மரபுத்திகள் பலவற்றை இக்கவிஞன் பின்பற்றிப் பயன்கொண்டான். என்றாலும் அத்துடன் நின்றுவிடாது அவற்றுள் பலவற்றைப் புகுத்திக் கையாண்டு புதுமை செய்தும் பல நவமான உத்திகளைப் படைத்து ஆட்கொண்டும் தனக்கென ஒரு தனிநிலை வகுக்கின்றான். பின்வந்த புலவர் பலருக்கும் கம்பன் படைப்பு ஒரு கருவூலமாகி அள்ளக் குறையாத உத்திச் செல்வம் வழங்கிச் செல்வாக்குப் பெறுகின்றது எனின் அது மிகையன்று.

## உசாத்துணை நூல்கள்


1) சுப்பிரமணியன், ச. வே, (1982), கம்பன் இலக்கிய உத்திகள், மியாமி பதிப்பகம், திரு. வி. க. இல்லம் 49, AR.A.RM தெரு, காரைக்குடி.
2) செல்வநாயகம் வி, (2005), தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3) நாராயண வேலுப்பிள்ளை, ஆ. இராமசுப்பிரமணியம், வ. த, இராசாராம், துரை (Ed) (2000), கம்பராமாயணம் சுந்தரகாண்டம் மூலமும் தெளிவுரையும் பாகம் 1, பாகம் 2, திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணசாலை நகர், சென்னை.
4) நீதிவாணன், ஜெ. (1979), நடையியல், முல்லை வெளியீடு, மதுரை.
5) Epstein, E.L (1978), Language Style, London, Methnen & Co. Ltd.